இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,243, MAY 21, 1908.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[By-laws relating to Bakeries, Local Board, Ambalangoda.]

1862 ம் ஆண்டு 15 ம் இலக்கச் சட்டத்தினது 5 ம் பிரிவின் கீழ் அம்பலங்கொடை நகரத்துக்காக தென் மாகாணத்து சுகசங்கத்தவர்களால் உண்டுபடுத்தியதும், சட்டநிருமாண சங்கத்தினது ஆலோசனையோடு தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தியதுமான பின்வரும் துணைப்பிரமாணங்கள் யாவரும் அறியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகின்றது.

இராசாங்க லிகிதர் கந்தோர், அதியுத்தம தேசாதிபதியவர்களினது கட்டளைப்படி,

1908 ம் ஆண்டு மே (வைகாசி) மீ 18 ந் தேதி.

ஹியு. கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

அப்பக்கிடங்குகள்.

1. அப்பக்கிடங்குகள் செவ்வையாகக் கட்டப்படவேண்டியது.—ஒவ்வொரு அப்பக்கிடங்கும் காற்று உலாவக்கூடியதாயும் வெளிச்சம்வரக்கூடியதாயும் சுவர்கள் சுண்ணாம்புச்சாந்தால் பூசப்பட்டு வெள்ளை அடிக்கப்பட்டும் இருக்கவேண்டியது. நிலம் காரைபோட்டு தண்ணீர் ஓடத்தக்க வசதிகள் போதியளவு செய்யப்பட்டிருக்க வேண்டியது.

2. அழுக்குத்தொட்டி முதலியவற்றிலிருந்து தூரம்.—யாதொரு அப்பக்கிடங்கு, ஒரு எருத்தொட்டி கக்கூசு, அல்லது சாக்கடையிலிருந்து 30 அடிக்குள் இருக்கப்படாது. அல்லது அவற்றில் இருந்து எழும்பும் நாற்றந்தம் பிடிக்கக்கூடியதாய் இருக்கப்படாது.

3. தளபாடங்கள்.—அப்பக்கிடங்குக்குரிய சகல தளபாடங்களும் சாமான்களும் துப்பரவாக இருக்க வேண்டியது.

4. மா முதலியன நல்லாயிருக்க வேண்டியது.—அப்பம் செய்வதற்காகப் பாவிக்கப்படும், மா தண்ணீர் முதலிய சகல பொருள்களும் நல்லதும் சவுக்கியத்துக்குரியதுமாய் இருக்கவேண்டியது.

5. அப்பக்கிடங்குகள் சுத்தமாக இருக்கவேண்டியது.—அப்பக்கிடங்கைச்சேர்ந்த இடங்களில் உள்ளவையும் அடுக்க இருப்பனவுமாகிய சகல கழிவுபொருள்களும் அழுக்குகளும் சுணக்கமில்லாமல் அகற்றப்படவேண்டியது.

6. அப்பக்கிடங்கில் வேலையாயிருப்பவர்கள்.—அருவருப்புக்கிடமான வியாதியுடையவர்கள் தொற்ற அல்லது பரம்பக்கூடிய வியாதியுடையவர்கள், அல்லது அப்படியான வியாதிக்காரரைச் சொற்ப காலத்துக்குமுன் பராபரித்தவர்கள் அல்லது ஸ்நானஞ்செய்யாமல், அல்லது மற்றும் விதமாய் அழுக்காயுள்ளவர்கள் ஆகிய இவர்களை அப்பக்கிடங்குகளில் வேலையில் வைக்கப்படாது.

7. அப்பக்கிடங்குகள் எப்போதும் சோதிப்பதற்கிடமாயிருக்கும்.—ஒவ்வொரு அப்பக்கிடங்கும் அதில் நடக்கும் வேலைகளும், அதின் பராபரிப்பும் சுகசங்கத்தலைவராலும், சுகாதார உத்தியோகத்தராலும், சுகசங்கத்தலைவரால் அதிகாரம்பெற்றவர்களாலும் எப்போதும் சோதிக்கப்படுதற்குரியதாயும் அந்தச் சோதனைக்கு அமைவுள்ளதாயும் இருக்கும்.

---

[By-laws relating to Bakeries, Local Board, Bandarawela ]

உரட்டி செய்யப்படும் கடைகளைப்பற்றிய 1898 ம் ஆண்டு 13 நொம்பர் சௌக்கிய தேர்ச்சிச் சங்கச்சட்டத்தின் 56 ம் பிரிவு 5 ம் பாகத்துக்கு அமைச்சலாக உண்டுபண்ணப்பட்டிருக்கும் துணைப்பிரமாணங்கள் கோதம்பை உரட்டி சுடப்படும் சகல இடங்களையுங் குறிக்கும் :—

1. உரட்டி சுடப்படும் ஒவ்வொரு வீட்டின் சுவர்கள் சுண்ணாம்பு சாந்து பூசி, வெள்ளையடித்து, நிலம் சிமெந்தி போட்டு போதிய அளவு கான்கள் உள்ளதாய் இருக்கவேண்டும்.

2. உரட்டி சுடப்படும் யாதொரு இடம் கக்கூஸ் முதலியவைகளுக்கு முப்பதடிக்குள்படவாவது, ஆகாத நாற்றங்கள் வீசக்கூடிய நிலைமையிலாவது இருக்கக்கூடாது.

3. உரட்டி சுடப்படும் இடம் வேறு ஒரு காரணத்துக்கும் பாவிக்கப்படல் ஆகாது.

4. சகல சட்டி சாமான்களும் மற்றும் பணிமுட்டுகளும் சுத்தமாயிருக்கவேண்டும்.

5. உரட்டிசெய்யப் பாவிக்கப்படும் மா தண்ணீர் முதலியவைகள் நல்ல சுகத்துக்கேற்றவையா இருக்க வேண்டும்.

6. உள்ளும் புறம்பும் இருக்கும் சகல குப்பை கூளங்கள் அழுக்கு முதலியவை கூட்டப்படுவதுமல்லாமல் கான்கள் நல்லாய்க் கழுவப்படவும் வேண்டும்.

7. தொற்றுவியாதி அல்லது அருவருப்பான வியாதிக்காரனாவது, அல்லது அவ்வியாதிக்காரனைப் புதிதாய்ப் பார்வையிட்டபேராவது, அல்லது மற்றும் கழுவாமல் அசுத்தமாயிருக்கும்பேராவது, உரட்டி சுடும் இடத்தில் வேலைக்கு ஏற்பட்டிருக்கலாகாது.

8. ஸ்தான சங்கக் கங்காணியாராவது, அல்லது ஸ்தான சங்கத்தால் எழுத்து அதிகாரம்பெற்றிருக்கும் பேராவது சூரியனுதயமாகி அஸ்தமிக்கும் நேரங்களுக்கிடையில் உரட்டி சுடும் எந்த இடத்திலாவது உட்பிரவேசித்துச் சோதனை பண்ணலாம்.

# LAND SALES.

## காணி விற்பனவுகள்.

No. 562, N. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1908 ம் ஆண்டு மே (வைகாசி)மீ 6 ந் உ.

1908 ம் ஆண்டு ஆனிமாதம் 30 ந் தேதி, செவ்வாய்க்கிழமை, காலமே 11 மணியளவில் தன் ஆபிசில் வடமாகாணத்து கவர்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற்கூறி விற்கப்படும்.

4 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் துணுக்காய்ப் பகுதியிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 2,263. உரித்தாளி—அரசாட்சி.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | காணிப் பெயர். | விபரம். | விசாலம். அ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 8315½ | வேட்டையடைப்பு | விடத்தல்காடு | தரிசு நிலம் | 5 | 0 | 13 |
| 8317 | டிெ. | டிெ. | டிெ. | 2 | 2 | 26 |
| 8318 | டிெ. | டிெ. | டிெ. | 3 | 1 | 1 |
| 8319 | டிெ. | டிெ. வயல் | நெல்வயல் | 4 | 0 | 0 |

இக்காணிகளைப்பற்றிய வேறே காரியங்கள் அறியவேணுமாகில் கவுண்மேந்து ஏசன்றிடமும், படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரிய துரையிடமும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமரவர்களின் கட்டளைப்படி,
ஹியூ. கிளிவோட்,
இராசாங்க விசிதர்.

---

No. 563, N. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பு, 1908 ம் ஆ மே (வைகாசி)மீ 6 ந் உ.

1908 ம் ஆண்டு ஆனிமாதம் 23 ந் தேதி, செவ்வாய்க்கிழமை, காலமே 11 மணியளவில், தன் ஆபிசில் வடமாகாணத்து கவர்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும்.

3 காணித்துண்டுகள், வட மாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் வலிகாமம் வடக்குப் பகுதியிலிருக்கின்றது.

படம் இலக்கம் 3,053. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | காணிப் பெயர் | விபரம். | விசாலம். ஏ. | ரூ. | ப. | தரிப்பு விலை அக்கொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 11360 | தெல்லிப்பளை மேற்கு | காக்கையன் புதுக்காடும் புன்னன் புதுக்காடும் | பழைய சுவக்காலை (காணிக்குக் காணி கொடுத்து மாறுதல் செய்ய) | 0 | 0 | 5 | 75 |
| 11361 | டிெ. | டிெ. | டிெ. | 1 | 0 | 32 | 75 |
| 11362 | டிெ. | டிெ. | டிெ. | 0 | 0 | 6 | 75 |

இக்காணிகளைப்பற்றிய வேறேகாரியங்கள் அறியவேணுமாகில் கவண்மேந்து ஏசன்று இடமும படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரையிடமும அறிந்துகொள்ளலாம.

மகோத்தமரவர்களின் கட்டளைப்படி,
ஹியூ கிளிவ்வோட்,
இராசாங்க விசிதர்.

---

No. 564, N. P

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1908 ம் ஆ மே(வைகாசி)மீ 14 ந் உ.

1908 ம் ஆண்டு ஆடி மாதம் 7 ந் தேதி, செவ்வாய்க்கிழமை, காலமே 11 மணியளவில் தன் ஆபிசில் வட மாகாணத்து கவண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது உரித்து முடிவுபண்ணப்படும்.

5 காணித்துண்டுகள், வட மாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் தென்மருட்சி, பூனகரி, பச்சிலைப்பளி முதலிய பகுதிகளிலிருக்கின்றன.

| காணித்துண்டின் இல. | கேள்விக்காரன் பெயர். | காணியின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | ரூ. | பெ. | அக்கொன்றுக்கு பாணப்பு விலை, ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் 3,424. குறிச்சி—சரசாலை. உரித்தாளி - அரசாட்சி. | | | | | | | |
| 12537 | கதிராமர், கந்தர் | மதலைக்காடு | காட்டு நிலம் | 0 | 0 | 21 | 15 | 0 |
| 12538 | ரோட்டுக்காக விடப்பட்ட நிலம் | — | — | 0 | 0 | 4 | — | |
| | படம் இலக்கம் 2,708. குறிச்சி—மட்டுவில் நாடு. உரித்தாளி—அரசாட்சி. | | | | | | | |
| 9593 | எஸ். நாகமுத்து | கணவாய்ப்பள்ளம் | நெற்செய்கைக்குத்தக்க | 60 | 0 | 0 | 15 | 0 |
| 9594 | ரோட்டுக்காக விடப்பட்ட நிலம் | — | — | 3 | 0 | 12 | — | |
| | படம் இலக்கம் 3,182. குறிச்சி—போக்கறுப்பு. உரித்தாளி—அரசாட்சி. | | | | | | | |
| 11791 | அந்தோனி மரியான் | தாண்டிசாட்டி வயல் | நெல்வயலுக்குத்தக்க | 7 | 3 | 20 | 21 | 50 |

இக்காணிகளைப்பற்றிய வேறே காரியங்கள் அறிய வேணுமாகில் கவுண்மேந்து ஏசன்றிடமும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரையிடமும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமர் அவர்களினது கட்டளையின்படி,
ஹியு கிளிவ்வோட்,
இராசாங்க விசிதர்.

# LAND ACQUISITION NOTICES.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Colombo District.]

1876 ம் ஆண்டு 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொம்பனித்தெருவுக்கு ஒரு புதிய றெயில் பாதைப்போட என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 13,483.

| துண்டு. | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | பே. |
|---|---|---|---|---|---|
| A 887 | வெறும் நிலம் | வி. குமாரசுவாமி | 0 | 0 | 2·18 |
| B 887 | தேத்தண்ணிக்கடையும் வெறும் நிலமும் | வெள்ளையம்மா | 0 | 0 | 0·37 |
| C 887 | ஒரு தென்னமரந் நிக்கிறநிலம் (ஒரு தோட்டத்தின் பகுதி) | அலிஜு மரைக்கான் | 0 | 0 | 1·12 |
| D 887 | 4 குடிகளிருக்கும் ஒரு கட்டிடத்தின் பகுதி | நார்டீன் | 0 | 0 | 3 |
| E 887 | 2 குடிகளிருக்கிற கட்டிடமும் வெறும் நிலமும் | ஓ. எல். எம். சமுசிடீனின் உருத்தாளிகள் | 0 | 0 | 2·62 |
| F 887 | 10 குடிகளிருக்கும் ஒரு வரிசைக் கட்டிடம் | மிரு ருசா | 0 | 0 | 7 45 |
| | | | 0 | 0 | 16·74 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன். தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டியபிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1908 ம் ஆண்டு ஆனிமீ 18 ந் தேதியிலன்று 1 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

எச். டபிள்யு. பிறெடெஸ்ட்,
அரசாட்சி ஏசன்று.

கொழும்புக் கச்சேரி,
1908 ம் ஆண்டு வைகாசிமீ 18 ந் தேதி.

---

[Tender for Provisioning Hospital.]

நிகழும் 1908 ம் ஆண்டிலே பின்குறித்சொல்லப்பட்ட ஆசுப்பத்திரிக்குத் தேவையான சாமான்களைப் பாலித்துக்கொடுப்பதற்காக கொந்திறுத்து ஒப்பந்தஞ்செய்ய விரும்புமவர்களிடமிருந்து "ஆசுப்பத்திரிக்குச் சாமான்கள் கொடுப்பதற்குக் கொந்திறுத்து ஒப்பந்தக்கேள்விக்கடதாசி" என்று மேல்வாசகத்திலெழுதி முத்திரைவைக்கப்பட்ட கேள்விக்கடதாசிகள் 1908 ம் ஆண்டு ஆனிமாசம் 1 ந் தேதி, திங்கட்கிழமை, பகல் 12 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும் :—

| | ரொக்கப்பிணை ரூபா. |
|---|---|
| அநுராசபுர ஆசுப்பத்திரி ... | 350 |

2. கொந்திறுத்து ஒப்பந்தக் கேள்விக்கடதாசிகள் இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரு கொப்பியைப் பிரதான சிவில் மெடிக்கல் ஒபிசருக்கும் மற்றக் கொப்பியை சங்கைபொருந்திய அரசிறைவருமானத் தலைவருக்கும் (Controller of Revenue) ஒரேமுறையிற்றானே அனுப்பிவைக்கவேண்டியது.

3. பிரதான சிவில் மெடிக்கல் ஒபிசரிடமிருந்து அல்லது குறிக்கப்பட்ட ஆசுப்பத்திரியின் மெடிக்கல் ஒபிசரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அச்சிட்ட கொந்திறுத்து ஒப்பந்தக் கடதாசிகளில் ஒப்பந்தங்களைக் கேட்கவேண்டியது. அப்படிப்பட்ட ஒப்பந்தக்கடதாசிகளிற் கேளாத ஒப்பந்தங்கள் கவனிக்கப்படமாட்டா. கேள்விக்கடதாசியும் அதற்கு அணைக்கப்பட்டிருக்கும் ஒப்பந்தப் பிணைப்பத்திரம் இரண்டு கனவான்கள் சாட்சிகளின் சமுகத்தில் கையெழுத்து வைக்கப்படவேண்டும்.

4. ஒவ்வொரு ஒப்பந்தக் கேள்விக்காரனும் கேள்விக்கடதாசியைப் பெற்றுக்கொள்ளும்பொழுது முற்பணமாகப் பிணையின் அரைவாசித் தொகையைக் கட்டிப்போடவேண்டியது. கொந்திறுத்து ஒப்பந்தத்தின்பின் ஆராகுதல் ஒப்பந்தப் பிணைப்பத்திரம் எழுத உடன்படாவிட்டால், அல்லது பிணைப்பணம் முழுவதையும் கட்டத்தவறினால், முற்பணமாகக் கட்டிய தொகை கொவறணமேந்துக்காகவிடும். கொந்திறுத்து ஒப்பந்தம் தீர்ந்து கையொப்பம் வைத்தபின் மற்ற ஏற்றுக்கொள்ளப்படாத கொந்திறுத்துக் கேள்விக்காரனுடைய பணத்தொகைகள் திரும்பிக் கொடுக்கப்படும். முற்பணம் திறசேரியில் அல்லது கச்சேரியில் கட்டி அதற்றை ஒப்பந்தக் கேள்விக்கடதாசி கொடுக்கும் உத்தியோகஸ்தரிடம் கொடுக்க வேண்டும். கச்சேரிகளில்லாத இடங்களில் குறித்த ஆசுப்பத்திரியின் மெடிக்கல் ஒபிசரிடமும் முற்பணம் கட்டவேண்டியது.

5. சாமான்கள் திறமானவையும் ஆசுப்பத்திரி மெடிக்கல் ஒபிசரால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவையுமாயிருக்கவேண்டும்.

6. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்க வேண்டும்.

7. கொந்திறுத்து ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாட் துவக்கம் இரண்டு கிழமைக்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திறுத்து ஒப்பந்தக்காரர் ஒவ்வொரு ஆசுப்பத்திரிக்கும் மேற்குறிக்கப்பட்ட பணப்பிணை கட்டவும் கேள்விப்பத்திரத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகையும் பிணையில் ஒரு பகுதியாய்ச் சேரும், அந்தத் தொகை கொழும்புக் கச்சேரியில் சங்கைபொருந்திய பொக்கிஷக்காரன் (Hon. the Treasurer) பேருக்கு கட்டப்படும். ஐந்நூறு ரூபாய்க்கு அல்லது அதற்கு மேற்பட பிணைகட்டவேண்டிய ஒப்பந்தக்காரர் தாங்கள் கட்டவேண்டிய தொகையை தங்களுக்குப் பிரியமானால் வசதியென்று காணுகிற ஓர் வங்கியில் சங்கைபொருந்திய பொக்கிஷக்காரர் (Hon. the Treasurer) பேருக்குக் கட்டிக்கொள்ளலாம். இதன்பின்னால் எவ்வேளையிலாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட உறுதியைக் கொடுத்து பணப்பிணையை மீட்டுப் புதுப்பிணையுறுதியைத் தன் சொந்தச் செலவில் முடிக்கிறது கொந்திறுத்துக்காரனுடைய பிரியத்துக்கு விடப்பட்டிருக்கின்றது.

8. ஆராகுதல் கொந்திறுத்து ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தில் பிழைகள் திருத்தினால் அப்பிழைதிருத்தங்கள் கேள்விப்பத்திரக்காரனின் கையொப்பம் பெற்றிக்க வேண்டும். அல்லாவிடில் கேள்விப் பத்திரம் சரியல்லதென்று தள்ளப்படும்.

9. இதைக்குறித்து இன்னும் விவரங்கள் அறியவேண்டியதானால் பிரதான சிவில் மெடிக்கல் ஒபிசரிடம் அறிந்துகொள்ளலாம்.

10. ஒப்பந்தக் கேள்விகளில் ஒன்றை அல்லது முழுவதையுந் தள்ளும் உத்தரவை வைத்திருப்பதுமல்லாமல், அவைகளில் எதாகுதல் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கௌவர்ணமேந்தாருக்கு உண்டு.

11. டிஸ்திறிக் ஆசுப்பத்திரிக்கு கேள்விக்காரர்கள் கொந்திறத்து ஒப்பந்தக் கேள்விக்கடதாசிகள் (Tender Forms) கந்தச ஐச்சாப்பியங்களுக்கு முதலிய குறைந்தவகை சாப்பாடுகளுக்கு (Low Diets) பால்ச்சேர்த்தும் பால் சேராமலும் விலை (Rates) போடவேண்டும்.

அல்லான் பெறி,
பிரதான சிவில் மெடிக்கல் ஒபிசர்.

பிரதான சிவில் மெடிக்கல் ஒபிசர் கந்தோர்,
கொழும்பு, 1908 மு ஆ வைகாசி 8 ந் உ.

---

[Close Season, North-Central Province ]

1891 ம் ஆண்டின் 10 இலக்கத்தின் 13 ம் பிரிவின் 1 ம் உட்பிரிவின்படி இத்தாலறிவிப்பது வடமத்திய மாகாணத்தில் மயில் பிடிக்கக் கூடாதென்று விலக்கப்பட்ட காலம் வருடாந்தம் கார்த்திகை 1 ந் தேதி தொடக்கம் அடுத்த பங்குனி 31 ந் தேதி வரைக்கும். இந்தக்காலத்தில் வடமத்திய மாகாணத்தில் ஒருவரும் லைசென்ச பெற்றாலுஞ் சரி பெறாவிட்டாலுஞ்சரி மயில் பிடிக்க சுடக் கொல்லப்படாதென்று இத்தால் வெளியரங்கப்படுத்தப்படுகிறது.

எ. டபிள்யு. சீமோர்,
வடமத்திய மாகாணம் ஏசன்றத்
துரையவர்களுக்காக.

அநுராதபுரம்,
1908 ம் ஆ வைகாசி 13 ந் உ.

---

[Close Season, North-Central Province.]

1891 ம் ஆண்டின் 10 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 13 ம் பிரிவின் 1 ம் உட்பிரிவின்படி இத்தால் அறிவிப்பது, வடமத்திய மாகாணத்தில் மயிலைத்தவிர்ந்த வேறுமிருகங்கள் சுடப்படாதென்று விலக்கப்பட்ட காலம், வருடாந்தம் ஆனிமாதம் 1 ந் தேதி தொடக்கம் ஐப்பசிமாதம் 31 ந் தேதி வரைக்கும். இந்தக் காலத்தில் வடமத்திய மாகாணத்தில் ஒருவரும் லைசென்ச பெற்றாலுஞ்சரி பெறாவிட்டாலுஞ்சரி மயில்தவிர்ந்த வேறு மிருகங்கள் பிடிக்க, சுட, கொல்லக்கூடாதென்று இத்தால் வெளியரங்கப்படுத்தப்படுகிறது.

எ. டபிள்யு. சீமோர்,
வடமத்திய மாகாண ஏசன்றத்துரை
அவர்களுக்காக.

அநுராதபுரம்,
1908 ம் ஆ வைகாசி 13 ந் உ.

---

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.